உ

ஸ்ரீ ராமஜெயம்

# சக்கரம்

## கலை இலக்கிய ஆன்மீக சிந்திப்பு ஏடு

இதழ் - I

ஐப்பசி 2011



"இனியொரு விதி செய்வோம்"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

ஸ்ரீ ராம ஜெயம்

# சக்கரம்

கலை இலக்கிய ஆன்மீக சிந்திப்பு ஏடு

இதழ் - I - ஐப்பசி 2011



தொடர்புகளுக்கு:
சக்கரம்
பெரியாழ்வார் ஆச்சிரமம்,
ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் தேவஸ்தானம்.
Email : chakkarameditor@gmail.com
T.P : 077 3463358, 021 321 4769



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளடக்கம்


| | | |
|---|---|---|
| 01. | சக்கரம் | 03 |
| 02. | ஆசியுரை | 04 |
| 03. | வாழ்த்துச் செய்தி | 05 |
| 04. | வாழ்த்துச் செய்திகளுடன் பேராசான் கா.சிவத்தம்பி | 06 |
| 05. | சக்கரத்தாழ்வார் | 08 |
| 06. | நிஜமான உறவாக நீ மாற வேண்டும் | 13 |
| 07. | நல்வழி காட்டும் கம்ப காவியம் | 14 |
| 08. | அகத்தை விளக்க அன்பு விளக்கு ஏற்றுவோம் | 17 |
| 09. | வாழ்க்கை | 26 |
| 10. | வரம் தரும் வல்லிபுரம் | 31 |
| 11. | கலையும் வாழ்வும் | 34 |
| 12. | மெஞ்ஞானமே விஞ்ஞானத்திற்கு வித்திட்டது. | 36 |
| 13. | Divine Love | 39 |




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சக்கரம்

**அன்பின் பெறுமதிமிக்க எம் வாசிப்பு நெஞ்சங்களுக்கு எம் கரம் குவிந்த வணக்க மலர்கள் தூவுகிறோம்.**

வல்லிபுரக் கோவில் பெரியாழ்வார் ஆச்சிரமத்தின் உதவியுடன் வெளிவரும் **"சக்கரம்"** என்னும் கலை, இலக்கிய, ஆன்மீக, சிந்திப்பு ஏடான இவ்விதழ் கண்ணனின் கையிலிருக்கும் சக்கரம் போன்று நீண்ட சுழற்சியுடன் செயற்பட எல்லாம் வல்ல மாயவன் அருள் புரிவான். இச் சிந்திப்பு ஏடு மூன்று மாதங்களில் ஓர் முகமாக உங்கள் கரங்களில் தவழ்ந்து அறிவுப்பசி தீர்க்கும் என்ற ஆவல். எந்தப் படைப்புக்களாயினும் அதன் கனதியையும், காத்திரத் தன்மையையும் தீர்மானிப்பது வாசிப்பாளர்களே. எங்கள் அவாவும், ஆசைகளும் அகல அசைவதற்கு உங்கள் திருப்பங்களும், விருப்பங்களுமே அடிநாதங்கள் ஆகின்றன. கல்வி உலகின் கறைகளைக் கழுவி புதிய அறிவுப் பாதையை விரிவுபடுத்தி அதன் வழியே சக பயணிகளாவோம்.

**தொடர்புகளுக்கு:**

**சக்கரம்**

**பெரியாழ்வார் ஆச்சிரமம்,**


**ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் தேவஸ்தானம்.**

Email : chakkarameditor@gmail.com

T.P : 077 3463358, 021 321 4769



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஆசியுரை

ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் ஆலயச் சூழலில் அமைந்திருக்கும் பெரியாழ்வார் ஆச்சிரமத்தின் பணிகள் போற்றத்தக்கது. வளர்ந்து வரும் இவ் ஆச்சிரமத்தில் ஸ்ரீ வல்லிபுரமாயவரைத் தரிசிக்க வரும் அடியார்கள் உய்யும் பொருட்டு நடைபெறும் வாராந்த ஆன்மீக நிகழ்வுகளும் அதனைத் தொடர்நது இடம்பெறும் அன்னதானச் செயற்பாடு அதனூடாக இடம்பெறும் சமுதாயப் பணிகளும் மேன்மை யடைந்து வருவதினையிட்டு நாம் பூரண மன மகிழ்வடை கின்றோம்.

இச் செயற்பாட்டிற்கு ஊன்றுகோலாக **"சக்கரம்"** எனும் பெயர் கொண்ட ஒரு இதழினை இவ்வருட உற்சவ காலத்தில் வெளியீடு செய்வதன் மூலம் ஆச்சிரமத்தினால் மேற்கொள்ளப்பட்டு வரும் பணிகளில் முதன்மைபெற்று விளங்க சந்நிதி வேலனை வேண்டுதல் செய்து நிறைவு செய்கின்றோம்.

***சுபம்! சாந்தி!***

**செ.மோகனதாஸ் சுவாமிகள்**

**குரு பணியில் சந்நிதியான் ஆச்சிரமம்,**

**செல்வச்சந்நிதி,**

**தொண்டமனாறு.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாயவன் துணை

# வாழ்த்துச் செய்தி

வடமராட்சி துன்னாலை கிராமத்தில் எழுந்தருளி யிருக்கும் வல்லிபுரமாயவன் (சக்கராழ்வார்) புனித ஸ்தலத்திலே ஆன்மீக செயற்பாட்டுக்களை மேற்கொண்டு வரும் பெரியாழ்வார் ஆச்சிரமம் ஓர் சஞ்சிகையினை வெளியிட முன்வந்துள்ளது.

ஆன்மீக செயற்பாடுகளில் அன்னதானம் ஒரு சிறந்த தார்மீக செயல் அதை செவ்வனே மேற்கொண்டு வரும் பெரியாழ்வார் ஆச்சிரமம் அடுத்த ஆன்மீக செயலான ஆன்மீக அறிவை வளர்க்கும் நோக்குடன் **"சக்கரம்"** எனும் சஞ்சிகையை வெளியிட முன்வந்துள்ளது. பயனுள்ள சமயம்சார் கட்டுரைகள், இறைவணக்க வழிமுறைகள் தாங்கிவந்து வாசிப்போரின் சமய அறிவை வளர்க்க உதவும் என பதில் சிறிதும் ஐயமில்லை.

இச் சஞ்சிகையை வல்லிபுர மாயவன் அடியார் களின் கைகளில் என்றும் தவழ வேண்டும் என மாயக்கண்ணனை வேண்டி நிற்கின்றேன்.

**களிப்புடன்**

**திரு.இ.அன்னலிங்கம்**

**வல்லிபுர ஆழ்வார் கோவில்**

**அறங்காவலர் சபை சார்பாக**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## வாழ்த்துச் செய்திகளுடன்

## பேராசான் கா.சிவத்தம்பி

வல்லிபுர ஆழ்வார் தேவஸ்தான பெரியாழ்வார் ஆச்சிரம உதவியுடன் வெளிவரும் **"சக்கரம்"** என்னும் இச் சஞ்சிகையின் தொடக்க வெளியீட்டிற்கு என் நெஞ்சு நிறைந்த வாழ்த்துக்களைத் தெரிவிக்க விரும்புகிறேன். **"வல்லிபுரக் கோயில்"** என்று நாம் வணங்கும் விஸ்ணு ஆலயம் வரலாற்றுப் பிரசித்தியுடையதாகும். மகாவம்சத்தில் இலங்கைக்கான இந்தியர்களின் வருகையைப்பற்றி பேசும் பொழுது **"சக்க திவியோர் வந்ததாகக் கூறுவர்."** **"சக்க"** என்னும் பாளிச்சொல் **"சக்கரம்"** என்பதையே குறிக்கும். பிற்காலத் தில் அப் பிரதேசம் யாழ்ப்பாண மன்னர்களின் முக்கிய இடமாக விளங்கிற்று. அக்காலங்களில் இதனை **"மணற்சி"** என்று கூறினார்கள். உண்மையில் **"வல்லிபுரம்"** என்னும் சொல் வல்லிபுர மணல் நகர் என்பதன் அடியாகவே வந்தது என்று கொள்வதற்கு இடமுண்டு. தெய்வேந்திர முனையிலும் அதாவது இலங்கையின் தென்கோடியிலும் விஸ்ணுவிற்கான ஒரு ஆலயம் உள்ளது. Dorrakka என்று கூறப்படுவதன் உண்மையான பெயர் தெய்வேந்திரமுனை என்பதாகும். வல்லிபுரக் கோயிலின் முக்கியத்துவங்களில் ஒன்று அங்கு ஞாயிற்றுக்கிழமைகளிலே விஷேடபூசை செய்வதாகும். இதற்குள் சூரிய வணக்கமும் தொக்கி நிற்பதாகக் கொள்ளவேண்டும் போலத் தெரிகிறது. வல்லிபுர ஆழ்வார் என்னும் தலம் புராதன வரலாற்றின் முக்கியமான ஓர் அம்சமாகும். வல்லிபுரத்தாழ்வாரை நமது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காவல் தெய்வமாகக் கொண்டு வழிபடும் அவனது சக்கரம் போன்றே நீண்ட சுழற்சியை உடையதாக விளங்க வேண்டும் எனப் பிரார்த்திக்கின்றேன்.

வல்லிபுர ஆழ்வார் கோயில் பற்றிய விரிவான ஆய்வு நடத்தப்படுதல் அவசியம். இலங்கை வரலாற்றைப் பொறுத்த வரையில் இலங்கையிலே கண்டெடுக்கப்பட்ட ஒரே ஒரு தங்கத் தகடு வல்லிபுரக் கோயில் பற்றிக் கூறுகிறது. அது கி.பி 6ஆம் நூற்றாண்டுக்குரியது என்று கூறுவர். மிகப் பழமையான கோயில் வல்லிபுரத்தாழ்வாரின் கிருபையால் நாம் பிறந்து வாழ்வோம் வாழ்ந்து சிறப்போம்.

**மிக்க அன்புடன்,**

**பேரா.கா.சிவத்தம்பி**

**குறிப்பு:-** இங்கு குறிப்பிட வேண்டிய வல்லிபுர ஆழ்வாரின் கிருபையால் இந்த இதழுக்கான வாழ்த்தினை மறைந்த உலகத்தமிழ்ப் பேராசான் பேராசிரியர் கா.சிவத்தம்பி அவர்களிடம் அவர் இவ்வுலகை விட்டுச் செல்வதற்கு ஒரு மாத காலத்திற்கு முன்பே நாம் தொலைபேசியில் தொடர்பு கொண்டபோது தன் உடற் சீரின்மை மத்தியிலும் எமக்கு வாழ்த்துக்கூறி அனுப்பியமை பெரும் பாக்கியமாகவே கருதுகிறோம்.

**நன்றி.**

**இதழ்குழு/ஆசிரியர்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சக்கரத்தாழ்வார்

காத்தற் கடவுளான ஸ்ரீமந்நாராயணனுக்கு அமைந்த ஆயுதங்கள் ஐந்தாகும். இந்தப் பஞ்சாயுதங்களே நாராயணனுக்கு திவ்ய ஆபரணங்களாகவும் விளங்குகின்றன. நாராயணருக்கு வைகுந்தத் திலிருந்து பணி செய்வதே பஞ்சாயுதங்களின் பெரும்பேறாகும். ஆயுதங்களாகவும், திருவடி நிலையாகவும், பட்டுப் பீதாம்பரமாக வும், படுக்கையாகவும், தலையணையாகவும், குடையாகவும், சிங்காசனமாகவும் பல நிலைகளிலும் உருவெடுத்து அடிமைப் பணி செய்வர். அப்படிச் சக்கரப் படையாக அடிமை செய்யும் நித்தியசூரி **“சுதர்சனம்”** எனப்படுவர். இவர் பஞ்சாயுதங்களில் முதன்மை பெற்றவர். இவர் என்றுமே இறைவனை விட்டுப் பிரியாதவர். சுதர்சனமே விஷ்ணுவாகும். விஷ்ணுவே சுதர்சன மாகும். சுதர்சனச் சக்கரமானது இறைவனைப் போலவே ஆதியந்தம் எதுவுமில்லாததாகும்.

சுதர்சன வழிபாட்டின் முக்கிய நோக்கம் பரம்பொருளை சக்கரயந்திர வடிவில் அமர்த்தி வழிபடுதலேயாகும். லிங்கத்தை ஸ்தாபித்து சிவனையும் வேல் வைத்து முருகனையும் வழிபடுவது போலாகும். சுதர்சனர் உக்கிர வடிவினர். இந்தியாவில் காஞ்சியும் திருக்குடந்தையும் சக்கர அம்சத்திற்கு சிறப்பாக உரிய திருத் தலங்களாகும். காஞ்சியில் சக்கர சக்தி எனப்படுபவர் (அஷ்டபுஜர்) எட்டுக் கரங்கள் கொண்டவராக விளங்குகின்றார். குடந்தையில் கோயில் கொண்டுள்ள சக்கரபாணி சுதர்சனரின் அம்சமாகும்.

தென்னிந்தியாவில் ஸ்ரீநிகமாந்த தேசிகன் காலத்திலிருந்து தான் ஸ்ரீசுதர்சன சக்கர வழிபாடு மிகவும் பிரபலமடைந்திருந்தது. அந்த மகான் **“ஸ்ரீசுதார்சனாஷ்டகம்”** என்னும் அரிய நூலை இயற்றினார். திருமாலின் கரத்திலுள்ள சக்கரத்திலே வசிப்பவராக அவருடன் சேர்த்தே ஸ்ரீசுதர்சனரையும் முன்னர் வழிபட்டு வந்தார் கள். ஸ்ரீதேசிகரின் காலத்திற்குப் பின் ஸ்ரீசுதர்சனரையும் சிலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வடிவில் வழிபடத் தொடங்கினார்கள். காஞ்சி, கண்டியூர், தாடி கொம்பு மோகூர், ஆழ்வார் திருநகரி, ஸ்ரீரங்கம், திருமயம், கள்ளக் குறிஞ்சி ஆகிய இடங்களில் உள்ள வைஷ்ணவ ஆலயங்களில் சிறப்பான சுதர்சன வடிவங்களைக் காணலாம். சில ஆலயங்களில் சுதர்சன விக்கிரகங்களுக்கு தனிச் சந்நிதி அமையப் பெற்றிருக் கின்றன.



**"சுதர்சனர்"** என்ற பெயருக்கு நல்வழி காட்டுபவர் என்றும் காண்பதற்கு இனியவர் என்றும் பொருள்படும். திருமால் எடுத்த அவதாரங்கள் தோறும் இந்தச் சுதர்சனத் திருவாழியும், ஆழ்வானும் விட்டுப் பிரியாது இறைவனோடு அவதரிக்கின்றான். வாமனாவதாரத்தில் தர்ப்பையின் நுனியில் அமர்ந்து சுக்கிரன் கண்ணனைக் கிளறி அழித்தான். நரசிம்மவதாரத்தில் விரல் நகங்களில் பல் உருக்கொண்டு ஆவிர்பவித்து இரண்யகசிபுவைக் கிழித்தெறிய உதவினான். கிருஷ்ண அவதாரத்திலும் திருவாழி ஆழ்வானின் தொண்டு சிறப்பாகவே அமைந்தது. திருவாழி ஆழ்வான், திகிரி ஷேதிராஜன் சுதர்சனன் சக்கரத்தண்ணல், நேமி, ரதாங்கம், என்ற பல பெயர்களால் இவர் அழைக்கப்படுகின்றார். எம்பெருமானிடத்திலே ஈடுபட்டு அவனுக்கே தன்னையாக்கிக் கொண்டு நினைவறிந்து செயற்படும் இத்தொண்டர் திலகம் **"சுதர்சன ஆழ்வான்"** என்றழைக்கப்படுவது வியப்பல்ல. சுதர்சன ஆழ்வாரின் மேலும் சில பெருமைகளைக் காண்போம். மால்யவன், சுமாலி என்னும் அரக்கர்களை கருடனாகப் போய் அழித்து முடித்தான். திருமாலடியவரான அம்பரீட மன்னனின் ஏகாதசி விரதத்திற்குப் பங்கம் விளைவிக்க நினைத்த துருவாச முனிவருக்கு விரதம் நோற்பவர்கள் உண்மையானவர்களாக இருப்பின் அவர்களிடம் சாபம் பலிக்காது என்ற உண்மை உணர்த்தி நின்றான். ஆனாலும் ஆறாத கோபாவேசம் கொண்ட துருவாச முனிவர் சக்கர ஆழ்வாரை நோக்கி **"நீயும் ஒளியிழந்து இருள் நிலையடைவாயாக"** என்று சபித்தார். சுதர்சனம் சீறி எழுந்து **"இதன் நிமித்தம் பின்னர் ஒரு காரியம் நிறைவேற்றப்பட வேண்டியுள்ளதால் நீ அடங்கியிரு"** என்று திருமால் கூறி சக்கரத்தாழ்வாரை அடங்கியிருக்கச் செய்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாரதப்போரில் ஜயந்திரன் அர்ச்சுனன் மகனான அபிமன்யுவைக் கொன்றுவிட்டான். அருச்சுனனும் மறுநாள் சூரியன் மறைவதற்குள் ஜயந்திரனைக் கொல்லப் போவதாகவும் முடியாது போனால் தான் தீக்குழித்து உயிரை மாய்ப்பதாகவும் சபதமெடுத்தான். போர் மூண்டது. சூரியன் அஸ்தமிக்கும் நேரம் நெருங்கிக் கொண்டிருந்தது. அருச்சுனனால் ஜயந்திரனைக் காண முடியவில்லை. அருச்சுனன் தீக்குளிக்க ஆயத்தமாகிக் கொண்டிருந்தான். கண்ணன் தன்னுடைய சுடராழியிடம் **"இன்று துருவாச முனிவரின் சாபம் உனக்குப் பலிக்கிறது"** என்று கூறி அவனை ஏவி சூரியனை மறைத்தார். இருள் சூழ ஆரம்பித்தது. அருச்சுனனின் அக்கினிப் பிரவாகத்தைக் காண கௌரவ சேனாதிபதியுடன் ஜயந்திரன் முன்வந்து நின்றான். கண்ணன் அருச்சுனனுக்கு ஜயந்திரனைக் காட்டினான். சுதர்சன ஆழ்வாரையும் வானிலிருந்து திரும்பப் பெற்றான். சூரியனும் அந்தி வானத்தில் பிரகாசித்தான். அருச்சுனனும் ஜயந்திரனின் தலையை அறுத்து ஆகாய வீதியிலே செலுத்தி மாலைக்கடன் செய்து கொண்டிருந்த அவன் தந்தையின் கைகளில் விழச் செய்தார். அவன் கையை உதற தலை கீழே விழுந்தது. அத் தந்தையின் தலையும் வெடித்துச் சிதறியது. ஜயந்திரன் பெற்றிருந்த வரத்தின்படி நேரே தலை கீழே விழுந்திருக்குமானால், அருச்சுனன் வெடித்துச் சிதறியிருக்கும். கண்ணனுக்குச் சீமாலி என்றொரு நெருங்கிய நண்பன் இருந்தான். அவன் கண்ணனிடமிருந்து பல ஆயுதங்களில் பயிற்சி பெற்றான். அதனால் ஆணவமடைந்து நல்லாரையும் வாட்டச் செய்தான். அதையறிந்து கண்ணன் வந்தான். ஒருநாள் சீமாலி, **"கண்ணா நீ பொய்யன், எல்லா ஆயுதங்களையும் கற்பித்த நீ சக்கராயுதத்தை எனக்குக் கற்பிக்கவில்லை"** என்று குறை கூறினான். **"நண்பா சக்கரம் எனக்கே உரியது. அதையுன்னால் ஆள முடியாது"** என்று கூறினான். அதற்கு சீமாலி **"என்னால் முடியாதது ஒன்று உண்டோ?"** என்று கூறினான். இடைவிடாது அவன் மேலும் மேலும் வற்புறுத்த கண்ணன் சக்கராயுதத்தை ஆகாயத்தில் எறிந்து மீண்டும் அதைக் கையில் ஏந்தினான். அதைப் போலவே சக்கராயுதத்தை மேலேயெறிந்து கையால் ஏந்த முற்பட்ட சீமாலியின் தலை அறுபட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காசிநகரில் இருந்த பௌண்ரக வாசுதேவன் என்னும் அசுரனை சக்கராயுதத்தினால் கண்ணனைக் கொன்றான். திருமாலிடம் ஆழ்ந்த பக்தி பூண்ட இந்த்ராயுமன்னன் என்ற மன்னன் அகத்தியரின் சாபத்தால் யானையாகி ஒரு பொய்கையிலிருந்து பூர்வஜன்ம வாசனையால் தாமரைப் பூக்களைப் பறித்து திருமாலைப் பூசித்து வந்தார். தண்ணீரில் நின்று தவஞ்செய்து கொண்டிருந்த தேவலரின் காலைப் பற்றியிருந்த சாபத்தால் கந்தர்வனொருவன் முதலையாகி இந்தத் தாமரைப் பொய்கையில் ஒரு ஆன்மடுவில் தங்கியிருந்தது. ஒருநாள் யானை அம் மடுவில் பூசைக்குப் பூப்பறிக்க இறங்கியது. முதலை யானையின் தலை யைப் பற்றியது. யானையும் சிறிது போராடிய பின் களைப்புற்ற நிலையில் **"நாராயணா ஓம்நாராயணா"** என்று அழைத்தது. திருமாலும் கருடன் மீதேறி வந்து முதலையைச் சக்கராயுதத்தால் கொன்று யானையைக் காப்பாற்றினார். யானையும் சாப விமோசனமாகி வீடுபேறடைந்தது.

ஸ்ரீரங்கத்தில் பிரபந்தங்களை இசையோடும், அபிநயத்துட னும் ஆடிப் பாடுகின்ற அரையருக்க (பக்தன்)கடும் நோய் கண்டது. இதனால் பெருமாள் காரியத்தைச் செய்ய முடியாமல் வருந்தினார். இதைக் கண்ட ஐயர் திருவாழி ஆழ்வானிடம் விண்ணப்பித்து அவரது நோயைப் போக்கியருளினார். இவ்வரலாறு **"சுதர்சன சதகத்தில்"** இடம் பெற்றுள்ளது. ஆனிமாதம் சித்திரை நட்சத்திரம் சுதர்சன ஜயந்தி தினமாகும். சுதர்சன வழிபாட்டில் ஆறு மற்றும் அதன் மடங்களில் மௌனமாகப் பிரதட்ஷணம் செய்வது கடைப்பிடிக்கப்பட்டு வருகிறது. இந்தப் பிரதட்ஷணங்களை ஆசாரமாக ஈர உடையுடன் செய்ய வேண்டும். நெய் விளக்கு ஏற்றி வைத்துவிட்டு இதை ஆரம்பிக்க வேண்டும் என்றும், ஒவ்வொரு பிரதட்சணத்திற்கும் ஒரு பழமோ அல்லது வேறு பொருள்களோ சந்நிதி வாசலில் வைத்து எண்ண வேண்டும் என்றும், அது போன்ற பல நியமங்களும் உள்ளன. மண்டலத்தில் முடிக்கும் பொழுது கோதுமைப் பாயாசம் நிவேதனம் பகவானுக்குச் சிறப்பு என்று சொல்லப்படுகிறது. இவையனைத்தும் கும்பகோணம் சக்கர



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாணிஸ்வாமி சன்னிதியில் திரளாக காலை, மாலை பிரதட்ஷணம் செய்பவர்களிடத்தில் காணலாம்.

பிராயச்சித்த கர்மாக்களிலும், ஸ்ரீவைஸ்ணவ சமய தீட்சை களிலும் ஸ்ரீசுதர்சன ஹோமம் செய்யப்படுவது வழக்கம். ஹோமத்தின் பிரார்த்தனையின் போது அஞ்ஞான அருளைப் போக்கி ஞானத்தைக் கொடுக்க வேண்டும் என்றும் மோட்சத்திற்கு வழிகாட்டியருள வேண்டும் என்றும் மோட்ஷ தீபிகையிலும் பிராயச்சித்த சங்கல்பத்தில் பல பல இன்னல்களைக் கூறி தன்னை அதிலிருந்து காப்பாற்றும்படி பிரார்த்திப்பதும் மந்திரத்தை வைத்து ஸ்புடம் செய்து இடையே சில பல பிரார்த்தனைகளை உள்ளீடாக வைத்து மாலா மந்திரம் ஆக்கிக் ஹோமம் செய்வது வழக்கத்தில் உள்ளது. இவ்வாறு திருவாழி ஆழ்வானின் பெருமை சொல்லுதற் கரியது. ஞானமளிப்பவர், ஆரோக்கியமளிப்பவர், விரோதியைப் போக்குபவர், செல்வம் தருபவர், மோட்ஷத்திற்கு வழி செய்பவர் என்று அவர் அடியார்களுக்குச் செய்யும் அனுக்கிரகங்களைப் பட்டியலிடலாம்.

இத்தகைய சிறப்புடைய சக்கர ஆழ்வார் **"வல்லிபுரம்"** என்னும் பதியிலே எழுந்தருளி எம்மையெல்லாம் காத்து அருள் செய்து துன்பங்கள் போக்கி நல்வாழ்வு அருளுகின்றார்.

**"கோவிந்த நாம சங்கீர்த்தனம்"**

**"கோவிந்தா ஹரி கோவிந்தா."**

**பிரம்மஸ்ரீ ச.க.சுதர்சனக்குரு**
***(பிரதமகுரு, ஸ்ரீ ஆழ்வார் பீடம்.)***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிஜமான உறவாக நீ மாறவேண்டும்

விடியும் பொழுதை
வீணடிக்க வேண்டாம்
நிலையற்ற வாழ்வில்
தடம்பதிக்க வேண்டும்.

சிந்தனை வாழ்வில்
சிறகடிக்க வேண்டாம்
சிந்தித்து வாழ்வை
திறம்படுத்த வேண்டும்.

பிறர் மேல் கொள்ளும்
வஞ்சனை வேண்டாம்
பரிந்துரை காட்டும்
உள்ளங்கள் வேண்டும்.

பிறர் மனதை துன்புறுத்த
நீ எண்ண வேண்டாம்
உன் மனதை உயர்வாக்க
நீ எண்ண வேண்டும்.

எவரையும் எடுத்தெறிந்து
நீ பேச வேண்டாம்
அனைவரையும் அன்பாலே
இணைத்திட வேண்டும்.

பாசமாக இருப்பதுபோல்
வேசம் போட வேண்டாம்
நிஜமான உறவாக
நீ மாற வேண்டும்.

**S.ரமணி**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல்வழி காட்டும் கம்ப காவியம்

கம்ப காவியமான கம்பராமாயணம் சமூகத்திற்கு நல்வழி களினை கவிநயத்தோடு காட்டிநிற்கிறது. ஒரு குடும்பத்திலே இருக்கின்ற பிள்ளைகள் பெற்றோர்கள் எப்படி இருக்க வேண்டும் என்றும் அதனால் ஏற்படுகின்ற சமூக நன்மைகளைப் பற்றியும் நன்றாகக் கம்பநாடன் தன் காவியத்தினிலே அழகாகக் காட்டி உள்ளார்.

சிறு வயதிலிருந்தே இராம இலக்குமணர்கள் பெரியோர்களை மதித்து தாம் கற்ற கல்வியின்படி வாழ்ந்து வருகின்றமையே அவர்களுக்கு தர்மங்களைச் சேர்த்தது. விசுவாமித்திர முனிவரோடு வேள்வியினைப் பாதுகாக்கும் பொருட்டு சென்ற போதிலும் கூட அங்கே **"தாடகை"** என்னும் அரக்கி வாயினைத் திறந்தபடி வருகின்ற போதும் அவளை பெண்ணென நினைத்துப் பெருந்தகை கொண்டு சோக மௌனமாக நின்றவன் இராமன் **"இராமா! பாணத்தை விடு"** என்று விசுவாமித்திரர் கூறிய போதிலும் தான் கற்ற கல்வியின்படி பெண்கள் மீது போர் தொடுக்கக்கூடாது என்பதற்கமைவாகவே அமைதியாக நின்றான். இதன் காரணமாகவே

**"ஆறி நின்றது அறன் நன்று..........."**

என முனிவரின் வாயினாலேயே புகழப்பட்டவன் இராமவீரன். இக் காலத்திலே உள்ள பிள்ளைகள் கல்வி கற்றதன் படிதான் நடக்கின்றார்களா? இல்லையே மாற்றி **"அன்னையும் பிதாவும் பின்னுக்கிடைஞ்சல் ஆலயம் தொழுவது வேலை மினக்கேடு"** என்கிறார்கள் என்ன செய்வது கலிகாலம் என்று சொல்லி பெரியார்கள் தலையில் கை வைக்கிறார்கள். எனவேதான் சமூகத்துக்கு நல்வழியினைக் காட்டுகின்ற கம்ப காவியமான இராமாயணம் போன்றன சமூகத்துக் குள்ளே இன்று விதைக்கப்பட வேண்டிய அவசியம் எழுந்துள்ளது. இக்காப்பியத்தில் சமூகத்துக்கு வேண்டிய நல்மணிகள் இன்னும் இருக்கின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இராமனைப் பார்த்து சிறியதாய் கைகேயி கூறுகின்றாள் **“இராமா நீ! பதின்நான்கு ஆண்டுகள் வனவாசம் செய்ய வேண்டும். உன் தம்பி பரதன் நாடாள வேண்டும்”** என உன் அப்பா கூறினார். எனக்கூறிய தாயைப் பார்த்து இந்தப் பண்பான இராமன் கூறுகின்றான்

**“என்னவன் பின்னவன் பெற்ற செல்வம்**
**அடியனேன் பெற்றதன் றோ.....................”**

எனப் பெருமைப்படுகின்ற சகோதர பாசம் இந்தக் காலத்திலே சகோதரர்களுக்குள்ளேதான் பிரச்சினை! காணிச்சண்டை, வேலிச் சண்டை, சொத்துச்சண்டை எல்லாம். பிரித்துக் கொடுத்த பாவத்துக்கு சில வீடுகளிலே பெற்றோருக்கும் உதைவிழுகிறது. அதற்குப் பிறகு எல்லாப் பிள்ளைகளும் ஒன்றாய்ச் சேர்ந்து தாய் தந்தையரை தூக்கிச் சென்று முதியோரில்லத்தில் சேர்த்து விடுவார்கள். இறந்த பிற்பாடு அந்தியேட்டியும் தங்களின் அறிவையும், பண்பையும் காட்டுகின்ற நல்ல அன்பான சகோதரர்கள் வாழுகின்ற காலம் இது.

கம்பகாவியத்தில் இப்படியில்லையே சிறிய தாயையே மதித்திருந்தார்கள். அது மட்டுமா பரதனுக்கென வழங்கப்பட்ட அரசாட்சியை மறுத்து தனது அண்ணனை அழைத்து வரச் சென்றானே தம்பி பரதன். அவன் கோசலை சொல்லுவதைப் போல **“ஆயிரம் இராமர்களுக்கு மேம்பட்டவன் தான்.....”** அரசாட்சியை தம்பியிடம் கொடுத்துவிட்டு அண்ணன் செல்ல தம்பியோ அரசாட்சி வேண்டாம் அண்ணன்தான் வேண்டுமென்று அவனைத் தேடிச்செல்ல வைக்கின்ற பாசச் சகோதரர்கள் வாழ்ந்த காலம். இப்போதென்றால் அரசாட்சிக்காகவே அண்ணனின் தலைக்கு ஆப்பு வைப்பார்கள். போலிப் பாசங்களும், உறவுகளும் இன்று சமூகத்தில் எல்லாம் இருந்தும் நிம்மதியை இழக்கச் செய்துள்ளது. அன்பில்லாத வாழ்வினை வாழ்ந்து கொண்டிருக்கின்றார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கம்ப காவியத்தில் இது மட்டுமல்ல இராமபிரான் அன்பிற்கும், பண்பிற்கும் தலை வணங்குகின்றவன் மட்டுமன்றி ஏகபத்தினி விரதனாகவும் வாழ்ந்து அதனூடாக சமூகத்துக்கு நல்ல வழியினைக் காட்டி நிற்கின்றான். இன்று எமது சமூகங்களில் சமூகச் சீரழிவுகள் பெரிதும் தலை தூக்கித் தாண்டவமாடுகின்றது. இந் நிலையில் இராமனும் சீதையும் வாழ்ந்த இல்லற முறையும், புரிந்துணர்வு நிலையும் இன்றைய சமூகத்துக்கு நிச்சயம் வழிகாட்டக் கூடியதொன்றாகும். இன்று கணவன் மனைவியரிடத்தே புரிந்துணர்வில்லை. வீட்டிலே சண்டை பிள்ளைகளுக்கு நிம்மதி யில்லை. எனவேதான் இன்றைய சமூகத்தில் காணப்படுகின்ற பிரச்சனைகள் யாவற்றுக்கும் நல்வழியினைக் காட்டுகின்ற காவிய மாகக் கம்பராமாயணம் அமைகின்றது என்பது கண்கூடு.

**பண்டிதர் சைவப்புலவர்.**
**பொன்.சுகந்தன்**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அகந்தை விளக்க அன்பு விளக்கு ஏற்றுவோம்

உலகின் அனைத்து சமயத்தவரும் ஏதாவது ஒரு வகையில் ஒளி வழிபாடு செய்து வருகின்றனர். இந்துக்களின் வழிபாட்டில் விளக்கேற்றலும், வழிபடுதலும் முக்கியமானவை. இந்து ஆலயங்க ளிலும், இல்லங்களிலும் வழிபடும் இடங்களிலும் விளக்கேற்றி வைத்து வழிபடுவது தெய்வீகத்தில் ஈடுபட்டோரின் வழக்கமாகும். விளக்கின் ஒளி புறஇருளை நீக்கி வழிபாடு செய்வது எனக் கருதப்பட்டாலும் விளக்கு ஏற்றி வழிபாடு செய்வது அக இருளை நீக்கி அகத்தினைத் தூய்மை செய்து ஒளிபெறச் செய்தலை உணர்த்துகின்றது. திருமூலர்.

**ஒளியும் இருளும் ஒருகாலுந் தீர**
**ஒளியுளோர்க் கன்றோ ஒளியா தொளியும்**
**ஒளியிருள் கண்டகண் போலவே றாயுள்**
**ஒளியிருள் நீங்க வுயிர்சிவ மாமே.**

என அழகாகக் குறிப்பிடுகின்றார். இங்கு ஒளி என்றது அறிவின் தெளிவையும், இருள் என்பது அறியாமையின் குழப்பத்தையும் குறிக்கின்றன. அறியாமை என்ற இருள் அகன்று அறிவு என்ற ஒளி மேம்படும் போது திருவருள் என்ற உயரிய ஒளி தோன்றி என்றும் நீங்காமல் நிலைத்திருக்கும். கண் ஒளியுடன் சேர்ந்து ஒளியாயும், இருளைச் சேர்ந்து இருளாயும் இருப்பது போன்று உயிர் அறியாமையுடன் சேர்ந்து இருளாயும், அறிவுடன் சேர்ந்து அறிவாயும் திகழும். தெய்வ வழிபாடு, ஆன்ம ஈடேற்றம் ஆகியவற்றின் விளைவாக மேற்கண்ட உயிரின் இருதன்மைகளும் கெட சிவஞானம் பெற்ற உயிர் சிவத்தன்மை பெற்றுப் பேரானந்தத்தில் திளைக்கும் என்பதே இதன் கருத்து.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தெரிந்த ஒன்றை வைத்து தெரியாததைத் தெரிந்து கொள்வதற்கு விளக்கினை அடியவர்கள் கையாளுகின்றனர். விளக்கில் எண்ணெய், திரி முதலியவற்றை அமைத்துக் கொண்டு தீயின் சுடரைக் காட்டினால் ஒளி தோன்றும். இது இருளை விலக்கி வெளிச்சத்தைத் தரும். இவற்றை உருவகப்படுத்தி அன்பும், ஆர்வமும் கொண்டு இறையருளை நாடினால் அது நமது அஞ்ஞானத்தை நீக்கி மெய்ஞ்ஞானத்தை அளிக்கும். ஐந்தெழுத்து மந்திரத்தை விதிப்படி ஓதினால் அதுவே,

**இல்லக விளக்கது இருள் கெடுப்பது**
**சொல்லக விளக்கது சோதி யுள்ளது**
**பல்லக விளக்கது பலரும் காண்பது**
**நல்லக விளக்கது நமச்சி வாயவே.**

என்று உள்ளத்து இருளை நீக்கி சோதி அளித்து நல்ல அக விளக்காகத் திகழும் என்கின்றார் நாவுக்கரசர் பெருமான். **"ஒளியே சிவம்"** என்பது இராமலிங்க சுவாமிகளின் கருத்து. அவர் ஒளி விளக்குக்கே ஆலயம் அமைத்து அருட்பெருஞ்ஜோதி அகவல் பாடினார்.

**அருள் விளக்கே அருட்சுடரே அருட்சோதி சிவமே**
**அருளமுதே அருள் நிறைவே அருள் வடிவப்பொருளே**
**இருள் கடிந்தென் உளமுழுவதும் இடங்கொண்டபதியே**
**என்னறிவே என்னுயிரே எனக்கினியே உறவே.**

என்று ஒளியைச் சிவமாக வணங்கினார். அகல், எண்ணெய், திரி, சுடர் இந்த நான்கும் சேர்ந்தாலே விளக்காகும். இவை நான்கும் அறம், பொருள், இன்பம், வீடு ஆகிய நான்கு பொருள்களை உணர்த்துகின்றன. மோட்ச விளக்கு ஏற்றுவதன் தத்துவமும் இதுதான். சரியை, கிரியை, யோகம், ஞானம் ஆகியவை நான்கு சாதனைகள். அனைத்திலும் அரியது அறிவு. ஆகவேதான் அறிவொளியைத் தீபதேவதையாக வழிபடுகின்றோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**உடம்பெனு மனையகத்துள் உள்ளமே தகழியாக**
**மடம்படுமுணர் நெய்யட்டி உயிரெனும் திரிமயக்கி**
**இடம்படு ஞானத் தீயாலெரி கொள இருந்து நோக்கில்**
**கடம்பமவர் காளைதாதை கடலடி காணலாமே.**

என்பது அப்பர் வாக்கு பெரியபுராணத்தில் கணம்புல்ல நாயனார் கணம்புல் அறுத்து, விற்று நெய்வாங்கி சிவன் ஆலயத்தில் விளக்கு எரித்துத் தொண்டு செய்தார். ஒருநாள் புல் விலையாகாமல் போகவே அப்புல்லையே தீபமாக எரித்தார். புல்லும் தீர்ந்தமையால் தம் திருமுடியைத் திரியாக வைத்துத் திருவிளக்கு எரித்துத் தொண்டின் சிறப்பை விளக்கினார். நமிநந்தி அடிகள் ஆலயத்தில் விளக்கெரிக்க நெய் தேவைப்பட்டதால் அந்திவேளையில் சமணரின் இல்லத்தில் சென்று நெய் கேட்டார். **"கையில் விளங்கு கனலுடையர் தமக்கு விளக்கு மிகை காணும் நெய்யிங்கில்லை விளக்கெரிப்பீராகில் நீரை முகந்தெரித்தல் செய்யும்"** என்றார் சமணர். சிவனின் திருவருளால் அருகிலுள்ள திருக்குளத்தின் நீரை முகந்து விளக்கில் நெய்யாக விட்டு நெடுநேரம் எரித்து மகிழ்ந்தார். இவ்விரு நிகழ்ச்சிகளும் இறைவனுக்குத் திருவிளக்கு ஏற்றுவதன் சிறப்பியல்பை உணர்த்தின. அப்பர் பெருமானும்,

**விளக்கினார் பெற்ற இன்பம் மெழுகினால்**
**பதிற்றியாகும்**
**துளக்கி நல்மலர் தொடுத்தால் தூய**
**விண்ணேறலாகும்**
**விளக்கிட்டார் பேறு சொல்லின் மெய்ஞ்ஞெறி**
**ஞானமாகும்**
**அளப்பில் கீதம் சொன்னார்க்கு அடிகள்**
**தாம் அமருமாறே.**

என்று திருக்கோயிலில் விளக்கிடுதல், மெழுகிடுதல், மலர் சாற்றுதல், தீபம் ஏற்றல், பண்ணிசைத்தல் போன்ற பணிகளின் இன்றியமையாமையும் அவற்றின் பேறுகளையும் கூறுகின்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருக்கோயிலை திருஅலகினால் தூய்மை செய்பவர் இன்பம் அடைவார்கள். தூயநீர் கொண்டு மெழுகித் தூய்மை செய்ப வருக்கு அத்தகைய இன்பம் பத்துமடங்காகும் மலர்சாற்றி வழிபடுபவர்கள் தூய விண்ணுலகம் அடையும் பெருமை பெறுவார்கள். ஆலயத்தில் தீபம் ஏற்றும் தொண்டு செய்பவர்கள் மெய்ஞ்ஞானத்தைப் பேறாகப் பெறுவார்கள். இறைவனைப் போற்றிப் பாடுபவருக்கு ஈசன் திருவருள் புரிவான் என்பது இதன் கருத்து.

இவ்விளக்கு ஏற்றுவது நாள்தோறும் நடைபெறும் நிகழ்ச்சி என்றாலும் அவ்விளக்கை அழகுபட வரிசையாக ஏற்றி வைத்து கார்த்திகை விளக்கீட்டு விழாவாகத் தமிழர்கள் கொண்டாடி வருகின்றனர். பழந்தமிழ் இலக்கியங்களில் கார்த்திகை விளக்கீடு பற்றிய குறிப்புக்கள் இடம்பெற்றுள்ளன. அகநானூறு என்னும் பழந்தமிழ் இலக்கிய நூலில் இக்கார்த்திகை விளக்கீட்டைப் பற்றிப் பல குறிப்புக்கள் வருகின்றன. காட்டிலே இலவ மலர்கள் மரம் குலுங்கப் பூத்துள்ளன. இலைகள் உதிர்ந்துவிட்டன. இலவ மலர்கள் செந்நிறங் கொண்டவை. மரத்தின் கிளைகளில் சிவந்த மலர்கள் அடுக்கடுக்காய் அமைந்துள்ளன. இந்த இயற்கை அழகு ஔவையாரை கார்த்திகை விளக்கீட்டு விழாவோடு இணைத்துப் பார்க்க வைக்கின்றது.

**வானம் ஊர்ந்த வளங்கொளி மண்டிலம்**
**நெருப்பு சிவந்த உருப்பு அவிர் அம்காட்டு**
**இலைஇல மலர்ந்த முகைஇல் இலவம்**
**கலிகொள் ஆயம் மலிபுதொகுபு எடுத்த**
**அம்சுடர் நெடுங்கொடி பொற்பத் தோன்றி** (அகம்.11)

மகிழ்ச்சியால் திளைத்து ஆரவாரித்து விழாக் கொண்டாடும் மகளிர் கார்த்திகை நாளில் ஏற்றி வைத்த விளக்கு வரிசையைப் போல இலவ மலர்கள் அடுக்காய் மலர்ந்துள்ளன என்று பாடியுள்ளார். கார்த்திகை என்பதற்கு அழல், எரி என்ற பெயர்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்டு. **"அழல் சேர்குட்டம்"** என சிலப்பதிகாரம் கார்த்திகையை அழல் என்கின்றது. **"எரிகடை எழில் வேழம்"** என்னும் இடத்தில் பரிமேலழகர் எரி என்பதற்கு அங்கியைத் தெய்வமாக உடைய கார்த்திகை என்று பொருள் கொள்ளுகின்றார். சீவக சிந்தாமணியில் **"கார்த்திகை விளக்கீட்டன்ன கடிகமழ் குவளைப் பைந்தார்"** என்ற தொடர் வருகின்றது. கார் நாற்பது **"நலமிகு கார்த்திகை நாட்டவர் இட்ட தலைநாள் விளக்கில்"** என்று குறிப்பிடு கின்றது.

பாம்பு தீண்டி இறந்த சிவநேசச் செல்வரின் மகளான பூம்பாவையை உயிர்ப்பிக்கும் பொருட்டு ஞானசம்பந்தர் திருமயிலைப் பதிகம் பாடினார். ஒவ்வொரு பாட்டாகப் பாடிப் பதிகம் முடித்து எலும்பைப் பெண்ணாக்கினார். அப்பதிகத்தே மயிலையில் நடைபெறும் பல விழாக்களைக் காணாது பூம்பாவை போதல் சரியன்று என்று கூறி எழுந்து வரச் செய்தார். அதில் ஒரு பாடல் பின்வருமாறு.

**வளைக்கை மடநல்லார் மாமயிலை வண்மறுகில்**
**துளக்கில் கபாலீச் சரத்தான் தொல் கார்த்திகைநாள்**
**தளத்தேந்து இளமுலையார் தையலார் கொண்டாடும்**
**விளக்கீடு காணாதே போதியோ பூம்பாவாய்.**

மங்கையர்கள் கொண்டாடும் இவ்விளக்கீட்டு விழாவினைக் கார்த்திகை விழா என சம்பந்தர் குறிப்பிடுகின்றார். பழைமையான விழா என்பதைக் குறிப்பதற்குத் தொல் கார்த்திகை நாள் என்றார்.

பழங்காலந்தொட்டே தமிழர்களால் போற்றப்படும் இவ்விழா பிற்காலத்தில் சமயச் சார்போடு பொருந்திய விழாவாகக் கொண்டா டப்பட்டு வருகின்றது. வைணவர்கள் காஞ்சியில் திருமாலை **'விளக்கொளிப் பெருமாள்'** என்றே வழங்கி விளக்கொளியின் சிறப்பைப் போற்றினார்கள். திருமால் பிரம்ம யாகத்தை அழித்துத் தீப்பிழம்பான நாள் கார்த்திகை விழா என்ற ஐதிகம் உண்டு. அட்ட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மங்கலங்களுள் ஒன்றாகிய இவ்விளக்கின் சிறப்பை, இவ் விளக்கொளியோடு தொடர்புபடுத்திப் புகழ்பெற்ற திருமால் அம்சம் பெற்ற அரசர்களைப் பாடும்போது **"புறப்பொருள் வெண்பாமாலை"** என்னும் நூல் **"விளக்கீட்டுநிலை"** என்னும் துறையால் பாராட்டுகின்றது.

விளக்கிலே இறைவனைக் கண்டு வழிபடும் விழாவாகச் சைவரும் கார்த்திகையைக் கொண்டாடினர். கார்த்திகைக்கு முதல் நாளான பரணி நட்சத்திரத்தில் தொடங்கி கார்த்திகையில் தீப்பிழம்பாக இறைவனைக் காணும் விழாவாக இது அமைகின்றது. சிறப்பாகத் திருவண்ணாமலை மீது விளக்கிடுவதும் அன்று விளக்கைக் கண்டு தொழுத பிறகே உணவு உண்பதும் சைவர்கள் விரதமுறை திருவண்ணாமலைத் தீபத்தை வழிபடுவோர்க்கு இறைவன் நலம் அருள்வதாகப் பெரியவர்கள் கூறுவர். கார்த்திகை மாதம் முழுவதும் மாலையில் விளக்கேற்றும் ஒருநடைமுறையும் உண்டு. காசியில் கங்கைக் கரையில் இவ்வழக்கம் இன்றுவரை பேணப்பட்டு வருகின்றது. இயலாதவர்கள் துவாதசி, சதுர்த்தசி, பௌர்ணமி இநத மூன்று திதிகளிலாவது தீபங்களை ஏற்ற வேண்டும்.

வீட்டு விளக்கீடு, குமாராலய தீபம், விஷ்ணுவாலய தீபம், சர்வாலய தீபம் என நான்கு பிரிவாகக் கார்த்திகை விளக்கீடு கொண்டாடப்படுகின்றது. வீட்டிலும் வீட்டைச் சுற்றியுள்ள இடங்களிலும் விளக்கேற்றுவது வீட்டு விளக்கே ஆகும். முருகன் ஆலயங்களில் விளக்கேற்றுவது குமாராலயதீபம் ஆகும். விஷ்ணு ஆலயங்களில் விளக்கேற்றுவது விஷ்ணுவாலயதீபம் ஆகும். ஏனைய தெய்வாலயங்களில் விளக்கேற்றுவது சர்வாலயதீபம் எனப்படும்.

கார்த்திகை விளக்கீடு அன்று ஆலயங்களில் சொக்கப்பனை கொளுத்துவது மரபு. பனை மரத்தை வெட்டி நடுவில் வைத்துச் சுற்றிலும் பனை மடலை வெட்டிக்கட்டி வைத்துக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொளுத்துவதால் **"சொக்கப்பனை"** என்னும் பெயர் வந்தது என்பர். சொக்கனாகிய சிவனை நினைத்து இதைச் செய்வதால் சொக்கப்பனை என்று கூறுவாரும் உள்ளனர். சொக்கப்பனையில் தீ மூட்டி அது சுவாலித்து எரியும் போது சோதிருபமாகவும், திருவண்ணாமலைத் தீபமாகவும் பாவனை செய்து அடியார்கள் வழிபடுவார்கள்.

கார்த்திகைத் திங்கள் கூதிர் காலத்தின் முடிவாக நிற்கின்றது. ஆடியில் தொடங்கிய தமிழர்களின் உழைப்பின் பயன் கார்காலமான கார்த்திகையில் கைகூடத் தொடங்கும். முதலாவதாகக் கார்நெல் அறுவடை செய்யும் காலம் கார்த்திகை ஆகும். **"கார்"** என்பது மேகத்தின் பெயர். அப்பெயர் அது பெய்யும் காலத்திற்குப் பொருந்தி பின் அக் காலத்தில் அறுவடை செய்யும் நெல்லுக்கு ஆகிவந்த ஆகுபெயர் என்று இலக்கணகாரர் உரைப்பர். கார்த்திகையில் அறுவடை செய்யும் நெல் கார்நெல். அதுவே உழவு ஆண்டுக் கணக்கில் முதலாவதாகப் பெறும் நெல். இயற்கையில் பெற்ற பயனை இறைவனுக்கும் படையலிட்டு சுற்றத்தோடு பகிர்ந்து உண்ணுவது தமிழர்களின் பண்பாடு. அப் பண்பாட்டில் கார்த்திகை விழாவினைப் புதிய நெல் கொண்டு சிறப்பித்தனர். கார்த்திகைக்கு **"அவல்"** ஓர் இன்றியமையாத பொருள். சர்க்கரைப்பாகு காய்ச்சி அதில் அவல்பொரி, தேங்காய்க் கீறு, ஏலப்பொடி இட்டுக் கலந்து உருண்டைகளாகப் பிடிப்பர். இதைக் **"கார்த்திகைப் பொரி"** என வழங்குவார். கார்த்திகை தீப தினத்தன்று இறைவனுக்கு நிவேதனம் செய்யும் முக்கிய சிற்றுண்டியாக அமைவதால் **"கார்த்திகைப் பொரி"** எனக் காரணப் பெயர் பெற்றது. சங்க இலக்கியங்களில் அவல் பதிலுணவாக விளங்கியமைக்குக் குறிப்புக்கள் உண்டு. பெண்கள் அவல் இடிக் கின்ற காட்சிகளைப் பல பாடல்கள் காட்டுகின்றன. அவலிடித்த உலக்கைகளை வாழை மரங்களில் சார்த்தி வைப்பர்.

**அவலெறிந்த வுலக்கை வாழைச் சேர்த்தி**
**வளைக்கை மகளிர் வள்ளை கொய்யும்** (பதிற்றுப்பத்து 29)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என நெற்கதிரைப் பிசைந்தெடுத்து பசிய நெல்லைக்குற்றி அவல் எடுப்பது பருவமகளிர் தொழில். கார்த்திகை விளக்கீட்டில் அவல் சிறப்பிடம் பெற்றதை அகநானூற்றுப்பாடல் ஒன்று தெரிவிக்கின்றது.

**குறுமுயல் மறுநிறங் கிளர மதிநிறைந்து**
**அறுமீன் சேரும் அகலிருள் நடுநாள்**
**மறுவிளக் குறுத்து மாலை தூக்கிப்**
**பழவிறல் மூதூர்ப் பலருடன் துவன்றிய**
**விழவுடன் அயர வருகதில் அம்ம**
**துவரப் புலர்ந்து தூமலர் கருவித்**
**தகரம் நாறுந் தண்நறுங் கதுப்பின்**
**புதுமண மகடூஉ அயினிய கடிநகர்ப்**
**பல்கோட்டு அடுப்பில் பால்உலை இரீஇக்**
**கூழைக் கூந்தல் குறுந்தொடி மகளிர்**
**பெருஞ்செய் நெல்லின் வாங்குகதிர் முறித்துப்**
**பாசவல் இடிக்கும் இருங்காழ் உலக்கை.**

(அகநானூறு 141)

பழைய நாளிலே கார்த்திகை விளக்கீடு, இன்றைய தீபாவளி, பொங்கல் ஆகிய இரண்டின் சிறப்பையும் கொண்டு விளங்கியது. கார்த்திகை விளக்கீடு அன்று புதுமகளிர் புதுநெல் கொண்டு அவல் இடித்துப் பாற்பொங்கலிட்டு மகிழ்வர். யாழ்ப்பாணத்தில் வடமராட்சிப் பிரதேசம் பனைவளங்கள் நிறைந்தது. பனங்கொட்டைகளைப் போட்டு முளைத்த பாத்தி கார்த்திகை மாதமளவில் பருவமான கிழங்காகிவிடும். விளக்கீடு அன்று அதனைக் கிண்டிக் கிழங்குகளை அவித்து ஓரிடத்தில் வைத்துப் படைப்பர். கொழுக்கட்டைகள் அவித்துப் படைக்கும் மரபும் யாழ்ப்பாணத்தில் நிலவுகின்றது. முருகன் ஆலயங்களில் கார்த்திகைதீப தினத்தன்று தேனும், தினைமாவும் கலந்து விளக்குகள் செய்து நெய்விட்டு எரிப்பர். வழிபாட்டின் நிறைவில் மாவிளக்குகள் பிரசாதமாக வழங்கப்படும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழர்கள் கொண்டாடும் விழாக்களில் பல உழவுத் தொழிலோடு தொடர்புபட்டன. நிலம் செம்மைப்படுத்தும் போதும், உழவின் போதும், பூச்சிகளைப் போக்கும் போதும், அறுவடையின் போதும், விளைவினைப் பெருக்க விரும்பும் போதும் வழிபாடும், விழாவும் ஆற்றப்படுகின்றது. கார்த்திகை விழா உழவுத் தொழில் சார்ந்த விழா. தீபம் வைப்பதையும், உழவுத் தொழிலையும் இணைத்தே காணவேண்டும். கார்த்திகை மாதத்தில் நெற்கதிர்கள் எல்லாம் முற்றியிருக்கும் மேகங்கள் சூழ்வதால் பூச்சிகளின் தாக்கமும் அதிகம், வீடுகளிலும், வீதிகளிலும், வளவுகளிலும் விளக்குகளையும், தீப்பந்தங்களையும் ஏற்றி வைப்பர் விளக்கு வெளிச்சத்தால் பூச்சிகளின் தாக்கம் குறைவடையும். விளைவும் சிறக்கும். தீயனவற்றை விலக்கி நல்லனவற்றைப் பெருக்கும் ஒளி விழாவாகவே கார்த்திகை விளக்கீடு அமைகின்றது.

விளக்கு மங்களப்பொருள் அதன் ஒளி நல்லறிவு காட்டுவது. அஞ்ஞான இருள் அகன்று நல்லறிவு பெற்று வாழ்வு சிறக்க வழிகாட்டியாக அமைவது விளக்காகும். இவ் விளக்குகள் வீடுகள் தோறும் ஏற்றப்பட்டு, ஒளிதந்து தம்மை அடுத்து வாழ்வோருக்கு வாழ்க்கை விளக்கங்களாக அமைகின்றன. வீட்டில் விளக்கேற்று வதோடு மட்டுமல்லாது நாட்டில் நல்ல உள்ளத்திலும் விளக்கேற்ற வேண்டியது அவசியமானது. அகல்விளக்கு புறஉலகை ஒளி செய்யும். அகத்தை விளக்க அன்பு விளக்கை ஏற்ற வேண்டும். இந்த நூற்றாண்டு தொழிநுட்ப நாகரிகம் அன்பு விளக்கை ஏற்ற அவாவில்லை. சான்றோர்கள் காட்டியபடி ஒருமித்து அகமும், புறமும் ஒளி வீச நல்விளக்கு ஏற்றுவார்களானால் நன்மை பெருகும். பண்பு சிறக்கும். பயனும் விளையும். உலகில் வாழும் அனைவருக்கும் இவ்விளக்கேற்றும் பணியில் பங்களிப்பு உண்டு. இதை உணர்ந்து கார்த்திகை விளக்கீட்டு நன்னாளில் விளக்கேற்றும் பணியை முன்னெடுக்க விழைவோமாக.

**திருமதி.செல்வஅம்பிகை நந்தகுமாரன்**

**விரிவுரையாளர், தமிழ்த்துறை,**

**யாழ், பல்கலைக்கழகம்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்க்கை

எங்கும் நிசப்தம் ஊரே அமைதியில் ஆழ்ந்திருந்தது. ஆனால் புவனாவோ புரண்டு புரண்டு படுத்தாள். நித்திராதேவி கூட தன்னை அரவணைக்கவில்லையென எண்ணும் போது நெஞ்சமே வெடித்து விடும் நிலையில் தன் ஒரேயொரு பற்றுக்கோடாய் இருந்த மகனால் இப்படியொரு நிலை தனக்கு வந்துவிடும் என அவள் கனவிலும் நினைத்திருக்கவில்லை.

என்ன செய்வது? பாவம் புவனா. இளவயதிலேயே பல இன்னல்களையும் சந்திக்க ஆரம்பித்து விட்டாள். நாட்டில் நிலவிய அசாதாரண சூழ்நிலையில் அவளது அன்புக் கணவனும் காணாமற் போனோர் பட்டியலில் இணைந்தோரில் ஒருவராகி விட்டான். புவனா அவனைத் தேடாத இடமுமில்லை, ஏறாத கோவிலும் இல்லை, ஏன்? காணாத சோதிடர் கூட இல்லை, அவளின் தேடல்களுக்கு இதுவரை விடை கிடைக்கவில்லை. இறைவனும் கைவிட்டு விட்டானே என வாழ்வில் வெறுப்பு ஏற்பட்ட போதிலும் தன் ஒரே மகனுக்காக வாழ்ந்தவள் புவனா. அவன்.... அவனா இன்று தன்னை விட்டுப்பிரிந்து சென்று விட்டான்? எப்படித் தாங்கும் அந்தப் பெற்ற மனம்?

கணவனைக் காணாத துன்பம் ஒருபுறம் வாட்டினாலும் "என் மகன் இருக்கிறான் எனக்கென்ன கவலை" என தன்னைத்தானே ஆற்றுப்படுத்துபவளல்லவா? புவனா வேலைக்கேற்றளவு படித்திருந் தாலும் அவளைத் தேடி வேலை எதுவும் வரவில்லை அவளிற்காக முயற்சிக்கவும் யாரும் விரும்பவில்லை. அவள் பல தடவைகள் சிந்தித்திருக்கிறாள். அதிஷ்டத்திற்கும் தனக்கும் என்ன பகையோ என. உண்மைதான் அவளது வாழ்வில் அவள் கண்ட இன்பங்களை விட துன்பங்கள் தான் எப்போதும் அதிகமாய் இருக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்க்கை என்றாலே இன்பமும், துன்பமும் மாறிமாறிவரும் சுழல் சக்கரம் என்பதை அவள் அறியாதவளுமல்ல. அந்த உண்மையை உணர்ந்ததால்தான் இன்றும் தனக்குத் தானே துணையாக வாழ்கிறாள். புவனா எத்தனையோ முறை வேலை தேடும் படலத்தில் இறங்கி தனக்குகந்த வேலை கிடைத்தும் தனித்து வாழும் பெண் என்ற ஒரே காரணத்தினால் அங்கு வந்த துயரங்களை ஏற்றுக் கொள்ளாமையால் தன் சொந்த முயற்சியில் வேலை செய்யத் துணிந்தாள். அதுதான் தையலர்க்குத் துணை யாகிய தையல் தொழிலை ஆரம்பித்தாள். தன் மகனின் எதிர்கால வாழ்விற்காக இரவு பகல் பாராது உழைத்தாள். மகன் உயர்கல்வி கற்று உயர் பதவியில் இருக்க வேண்டும் என்பதே அவளின் இலட்சியமாக இருந்தது. நகர்ப்புறப் பாடசாலையில் கற்பித்து அவனின் சாதனைகளைக் கண்டு மகிழும் அவளுக்கு இவற்றில் பங்குகொள்ள அவன் தந்தை இல்லை என்ற எண்ணம் கண்களில் நீராக வழியும்.

“மகனே! என்றோ ஒருநாள் உன் தந்தை உன்னைத் தேடி வருவார். அப்போது அவரது ஆசைப்படி நீ ஒரு சட்டத்தரணியாக அவர் முன் நிற்க வேண்டும். நிறைவேற்றுவாய்தானே” இதுதான் அவளின் விண்ணப்பம். அவள் தோல்விகளுடன் போராடி வாழ்பவளாதலால் தன் மகன் சட்டத்தரணி ஆவான் என்பதிலும் கணவர் உயிருடன் வருவார் என்பதிலும் திடமான நம்பிக்கை கொண்டிருந்தாள். “என்னம்மா! ஏன் நீங்கள் பயப்பட வேண்டும்? அம்மாவின் ஆசைகளை நிறைவேற்ற வேண்டும் என்பதுதான் எனது ஆசையும்” தன்அன்பு வார்த்தைகளால் தாயைக் கட்டிப்போடுவான். புவனாவிற்கு மகனும் மகனக்குத் தாயும் என தமக்குள்ளேயே இன்ப, துன்பம், கவலை, கஸ்டம் அனைத்தையும் பகிர்ந்து கொள்வார்கள்.

காலம்? அதை நினைத்தால் நிறுத்திவிட முடியுமா? அல்லது அதுதான் யாருக்காகவும் காத்திருக்குமா? தன் பாதையில் நகர்ந்து கொண்டிருந்தது. தாய் பட்ட கஸ்டத்தையும், முயற்சியையும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிதறடிக்காது மகன் சட்டத்தரணியாக வெளியேறினான். தாயின் மகிழ்ச்சி வார்த்தைகள் இல்லை அவளின் குதூகலிப்பிற்கு. சந்தோசக் கோடுகள் அவள் முகத்திற்குப் புது அழகைக் கொடுத்தன. இனி என்ன? மகனுக்கேற்ற வாழ்க்கைத் துணையைத் தேட வேண்டும்.

"தம்பி! நீ என் ஆசையை நிறைவேற்றி விட்டாய் இருந்தாலும் இத்தோடு உனது வாழ்கையும் முடிந்து விடவில்லை. இனிமேல் தான் உனக்கான வாழ்க்கையை நீ ஆரம்பிக்க வேண்டும். எனக்கும் வயதாகிறது திடீரெனக் கண்ணை மூடிக் கொண்டால்........ அவளை மேற்கொண்டு பேசவிடாமல் அவன் கைகள் தடுத்தன. தன் வேண்டுதல்களை உயிரைக் கொடுத்தாவது செய்யக் கூடியவள் தன் தாய் என்பதை நன்குணர்ந்திருந்தாலும் ஏனோ தன் மனதில் இருப்பதைத் தைரியமாகக் கூறிவிட முடியவில்லை. அவள் திருமணப் பேச்சுப்பற்றி ஆரம்பித்தபோது கொஞ்சம் தடுமாறித்தான் போய்விட்டான். அவன் கண்முன் அவனது கனவுதேவதை தாரா தோன்றி மறைந்தாள்.

அம்மாவிடம் எப்படிச் சொல்வது? யோசனையில் இருந்தவனை, "என்ன தம்பி யோசிக்கிறாய்? அம்மா தனித்துப் போயிடுவன் என்று கவலைப்படுகிறாயா? உன் சந்தோசமான வாழ்வை நான் பார்க்கணும். எனக்காகவே வாழும் அம்மா இதையும் செய்யமாட்டாளா என்ன? தன்னை ஒருவாறு சுதாகரித்துக் கொண்டு அம்மா........... எங்கட கிளாஸில படிச்ச தாராவைத் தெரியும்தானே. அவள் இப்ப வைத்தியராக இருக்கிறாள். அம்மா உங்கட பதிலைத்தான் அவளும் பார்த்துக் கொண்டிருக்கிறாள்................ என்ன தம்பி சொல்கிறாய்? அவள் விளங்காதது போல் கேட்டாள் விபரம் அறிவதற்காக. என்ன செய்வது? சொல்லித்தான் ஆக வேண்டும். அம்மாவுக்குத்தானே அவளைக் கண்டது முதல் அனைத்துக் கதைகளையும் கேட்டவளுக்கு, இதிலும் தன்னைக் கஸ்ரப்பட வைக்காத தன் மகன் பிடித்தாலும் புளியங்கொப்பைத்தான் பிடித்திருக்கிறான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவளுள் பெருமித எண்ணங்கள் வந்து போயின. கவலைகளை மறக்க வைத்து வாழ்ந்த மகனால் இன்று அவளுக்கு முன்னைய வாழ்வைப் போல பல சொந்தங்களுடன் பழகும் மகிழ்ச்சி மகனின் புது வாழ்க்கை அவளின் முகத்திலும் புதிய ஒளியைக் கொடுத்தது. சொந்த மகளைப் போல் தன் மருமகளை எல்லாவிதத்திலும் கவனித்தாள். ஆனால் அவளின் அன்பைப் போல் தாராவும் கரிசனையாக இருப்பதாகத் தெரிய வில்லை. சிறுசிறு மாற்றங்கள் இவற்றுக்குக் காலாக அவள் உயிர் நண்பி நிஷா தூண்டுதலாக இருந்தாள். தனிக்குடித்தனம் செல்லும் அவா மேலிட்டது. "என்னங்க, கொழும்புப் பக்கம் போனால் இன்னும் முன்னேறலாம். இங்கேயே இருந்து என்ன செய்யிறது? வருமானமும் அதிகரிக்கும். பிளீஸ் கொஞ்சம் யோசிச்சுப் பாருங்க எங்கட தங்கச்சியாக்களின்ர அலுவலும் பார்க்கோணும்." அவளின் நச்சரிப்புக்கள் நாளுக்கு நாள் அதிகரிக்க அவனாலும் மறுக்க முடியாதிருந்தது. தனக்காகவே வாழ்ந்த தாயை விடுவதா? தன் தாரத்தின் வேண்டுதலை மறுப்பதா? மனைவியின் பிடிவாதத்தை அறியாதவனா என்ன?

எதற்கும் அம்மாவின் ஆலோசனையை கேட்கலாம் என்ற தீர்மானத்தில் வேலையில் மூழ்கியிருந்தவன், சற்றும் எதிர்பாராத கேள்வியால் இடியோசை கேட்ட நாகம் போல் நெஞ்சம் கலங்கினாள்.

"என்ன தம்பி? நான் தனியாக எப்படி இருப்பது? வீட்டையும் விட்டுவர முடியாது. நாடும் சீராகுது அப்பாவையும் சில நேரம் விடுவாங்கள் தானே. அவள் உள்ளக் கிடக்கைகள் வெளிவந்தன. தாயின் திடமான முடிவை அறிந்து கொண்டவனால் எதுவும் செய்ய முடியாதநிலை தாராவின் நச்சரிப்புக்களும் குறைவதாகத் தெரிய வில்லை. தாயிடமிருந்து சற்று விலக வேண்டியநிலை. அன்று ஞாயிற்றுக்கிழமை வாகனத்தில் பொருட்கள் ஏற்றப்பட்டுக் கொண்டிருக்கின்றன. கொழும்பு வாழ்க்கை எண்ணிய தாராவின் முகத்தில் பலகோடி தாரகைகள் பூத்தன. பாவம் தினேஸின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முகத்தில் பிரிவின் சோகம் ஊற்றெடுத்துக் கொண்டிருந்தது இருந்தும் மனைவியின் சந்தோசத்திற்காக சிறுவயதிலிருந்து துன்பங்களோடு போட்டி போட்டு வளர்த்த தாயை பணயம் வைக்க வேண்டிய நிலை.

அம்மா......!

உலகமே வெடித்துச் சிதற தனிமையில் நிற்பது போன்ற உணர்வு. மெல்லத் தலையசைக்க. "பேரன் பிறந்தால் உடனே அறிவிச்சுப் போடு மோனே". அங்கு நிற்கப் பொறுக்காதது போல் காற்றைக் கிழித்துக்கொண்டு வாகனம் சென்றது. அன்றைய ஏக்கம் இன்னும் அவளிடமிருந்து விடைபெறவில்லை. தனக்காகவே வாழ்வதாய் வீராப்புப் பேசிய தங்கமகன் தனிமையை மட்டும் நிரந்தரப் பரிசாக்கி விட்டு போய்விட்டான். அவன் பிடித்த புளியங்கொப்பால் தான் மட்டும் விழுவேன் என்பதை அவளால் எண்ண முடியாதிருந்தது. வாழ்வே சூனியமாகிக் கொண்டிருந்தது. வெறுப்புக்களோடு வாழ்ந்தாலும், "**அவன் நல்லா இருக்க வேணும்**" இன்றும் அவள் இப்படித்தான் வாழ்த்துகிறாள்.

**P.சுரேக்கா**

**இளம் படைப்பாளிகளே**

**உங்கள் படைப்புக்களையும்**

**சக்கரம் தாங்கி வர விரும்புகின்றது.**

**எனவே உங்கள் படைப்புக்களை அனுப்புங்கள்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வரம் தரும் வல்லிபுரம்

நாட்டின் நகரங்கள் ஒவ்வொன்றின் தோற்றுவாய்க்கும் வளர்ச்சிக்கும் வேறுபட்ட கதைப்பின்னணிகள் களமாக அமைந் துள்ளன. அதே தன்மைதான் வல்லிபுரம் என்னும் நகரத்தின் தோற்றத்திற்கு தனித்துவமான கதைக்கரு ஒன்று ஆழமாகக் கால் பதிந்துள்ளது.

இவ்வகையில் **"வல்லிபுரம்"** என்னும் நகரம் எத்தகைய வீரியத்துடன் விரிந்து கிடக்கின்றது என்பதை நோக்குமிடத்து இந்நகரம் மன்னர் ஆட்சிக் காலத்தில் முக்கியம் பெற்றதுடன் மட்டும் நின்று விடாது அதன் பின்னரும் சிறப்புக்கள், பெருமைகள் குன்றாது இருப்பதும் சிறப்புத்தான். இதற்கு ஆதாரங்களும் முன்னர் கண்டெடுக்கப்பட்டுள்ளன.அதாவது வல்லிபுரப் பொன்னேடு என்னும் கல்வெட்டு இதற்குச் சான்று பகர்கிறது. இத்தகைய சிறப்புக்களும், பெருமைகளும் கொண்ட **"வல்லிபுர ஆழ்வார்"** என்னும் பெயர் கொண்டு உலகத்தவர் கைகூப்பி வணங்கும் பொருத்தப்பாடுடைய சக்கரத்தாழ்வார் குடிகொள்ளும் புனிதத்தலம் அமைந்தமை இந் நகரின் சிறப்பை மேலும் மெருகூட்டுகின்றது.

இவ் வல்லிபுர ஆழ்வாரின் தோற்றச் சிறப்புக்களைத் தொட்டுப் பார்க்கின் இதன் தோற்றத்திற்கு இரு கதைகள் தட்ஷிணகைலாய புராணத்திலே கூறப்படுகின்றது. முன்பு இரணியன் என்னும் அசுரன் தேவர்களுக்கு பலவேறுபட்ட இன்னல் களைக் கொடுத்து வந்தான். இதன் காரணமாக தேவர்கள் தங்கள் பாதுகாப்பினை உறுதிப்படுத்தும் முகமாக இராட்சஷகணங்களைக் கட்டியிருந்தார்கள்.

இதனால் தேவர்களுக்கு அண்மையில் இரணியனால் இச் செயற்பாடுகளை அறிந்த இரணியன் தன்னுடைய ஏவலர்களைக் கொண்டு அக்கண்களை எடுத்து ஆழ்கடலில் எறிந்தான். இதன் காரணமாக தேவர்கள் தங்களது கங்கணங்களை எடுத்துத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தருமாறு சிவபெருமானை நேக்கித் தவமிருந்தார்கள். சிவன், விஸ்ணுபிரானிடம் அக்கணங்களை எடுத்துக் கொடுக்குமாறு பணிக்க எல்லாம் வல்ல மாயவன் வங்கக் கடலிலே கற்கோவளக் கடற்கரையில் அவதரித்து **"வல்லிபுரம்"** என்னும் நகரிலே அதாவது இப்பொழுதுள்ள வல்லிபுரக் கோயிலில் வைத்துவிட்டு மறைந்தார். இதே போன்று விஸ்ணு மச்சவதாரம் எடுத்து **"வல்லிபுரம்"** என்னும் தலம் தோற்றம் பெறுவதற்கு மற்றுமொரு கதை தட்ஷிணகைலாச புராணத்திலே கூறப்படுகின்றது.

அதாவது **"இளவல்லி"** என்னும் மாது நாகசாபம் நீங்கிப் புத்திரப்பேறு பெற்றுக் கொண்டமையும் இதே புண்ணிய தலத்திற் தான். ஒரு நாள் கிருஸ்ணபரமாத்மா கற்கோவளக் கடலிலே மீன் பிடித்துக் கொண்டிருந்த வலைஞர்களின் வலைத் தொடரில் பிடி பட்டு மிகவும் துள்ளிப் பாய்ந்து கொண்டிருந்தது. ஆம் மீன் தோற்றம் கொண்டு வந்த மாயக்கண்ணன் மீனைப் பிடிக்க வேண்டும் என்ற அவாவுடன் அதனைப் பிடித்த அதிசய நிகழ்ச்சியை பார்ப்பதற்கு மக்கள் எல்லோரும் அங்கே வந்து கூடினர். இவ்வாறு அங்கு மக்களோடு மக்களாக வந்திருந்த இளவல்லி என்னும் திருக்கன்னியின் மடியில் துள்ளிக் குதித்து நொடிப்பொழுதில் அம்மீன் ஒரு குழந்தையாகத் தோற்றம் அளித்தது. அக் குழந்தையானது பச்சைமரத்தளிர் போன்ற மேனியும், பீதாம்பரம் உடுத்தவரும், துளசி மாலை அணிந்தவரும், அழகிய மார்பினை உடையவரும், நான்கு புயங்களோடு கூடிய வரும், சங்கு சக்கரங்களைக் கைகளில் ஏந்தியவருமாகத் தோற்ற மளித்தார். இதன் காரணமாகத்தான் ஆழ்வார்கள் கண்ணனின் தோற்றப் பொலிவினைப்

**"பச்சைமா மலை போல் மேனி பவளவாய் கமலச் செங்கண்**
**அச்சுதா அமரர் ஏறே அமரர் தம் கொழுந்தே என்னும்**
**இச்சுவை தவிர யான் போய் இந்திர லோகம் ஆளும்**
**அச்சுவை பெறினும் வேண்டேன் அரங்கமா நகருள்ளானே".**

எனப் பாடியுள்ளனர். கடற்கரையில் வெயிலின் தன்மை தாங்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முடியாது அப் பெண்மணி அம் மீனவர்களின் உதவியுடன் சிறிது தூரம் நடந்து சென்று தன் சேலையிலே தொட்டில் ஒன்றினைக் கட்டி பாடல்களை இசைத்துக் கொண்டிருந்தாள். அந்நிகழ்வினைப் பார்க்க வந்தவர்கள் அனைவரும் மிக்க ஆச்சரியத்துடன் பார்த்து வணங்கினார்கள். அக் குழந்தை பின்னர் அதே இடத்தில் சக்கர மாகத் தோற்றம்பெற்று இன்றுவரை பக்தர்களுக்கு அருள்மழை யினைப் பொழிந்து கொண்டிருக்கின்றான்.

இத் தன்மைகளைத் தொடர்ந்துதான் **"வல்லிபுரம்"** என்னும் புனித விஸ்ணு ஆலயம் தோற்றம்பெற காரணமாயிற்று. அதர்மத்தை அழித்து தர்மத்தை நிலை நாட்டுவதற்காக பல்வேறு பட்ட அவதாரங்களை எடுத்து எம்மைக்காத்து வருவதனை நாம் அறிந்துள்ளோம்.

இதற்கு அமையவே விஸ்ணுவினால் பத்து அவதாரங்கள் எடுத்து அதிலும் மச்சவதாரத்தினை வல்லிபுரத்தில் எடுத்து எமக்கு எல்லா வல்லமைகளையும் வாரிவழங்கி வருகிறார்.

**வை.நவா**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கலையும் வாழ்வும்

கலைப் படைப்புக்களானவை மனிதனது இயங்குதலின் உற்பத்திகள். அவ் இயக்குதல் உற்பத்தியின் ஊடாக மனிதர் களது வாழ்வியல் கட்டமைக்கப்படுவதுடன் அவர்களது எண்ணங் கள், மனப்பதிவுகள் பரிமாறப்படுவதுடன் அவர்களது ஆளுமைக் கான பறைசாற்றலாகவும் அமைகின்றன.

எம்மவர்களினால் இன்று மரவுவழி கலைகள் எனப் பேசப் படுகின்ற பெரும்பாலானவை எமது முன்னோர்களின் வாழ்வியற் பதிவுகள்.

தம் உணர்வியலுக்கேற்ப பல்தள உணர்வுகளினையும் கலைகளின் ஊடாக பதிவு செய்துள்ளனர். அப்பதிவுகளின் ஊடாக அம்மக்களது நேர்த்தியானதும், சிந்தனை பூர்வமானதுமான கருத்து நிலைகளினைக் கண்டுகொள்ள முடியும்.

உழைப்புப் போக்கில் இருந்து விடுபட்ட போது ஓய்வு நேரங்களினை பயனுள்ள வகையில் அமைத்துக் கொண்டதன் விளைவுகளாக கலைகள் பிறந்ததாக குறிப்பிடுவர். எது எப்படியோ அவர்களது வாழ்வியலின் நீட்சியாக கலைகளினைக் கண்டு கொள்ள முடியும்.

இன்றைய பொழுதுகளில் கலைகள் என்பது வெறுமனே கேளிக்கைக்குரியதாக சிலரால் பார்க்கப்படுகின்ற போக்கினையும் அவதானிக்கலாம்.

கலைகள் வெறுமனே கேளிக்கைக்குரியதாகவும், பொழுது போக்கிற்குரியதாகவும் மட்டுமல்லாமல் கலைஞனின் உள விடுதலைக்கும், சமூகத்தின் உளவிடுதலைக்கும் கட்டியம் கூறுவனவாக அமைகின்றன.

கலை வெளிப்பாடுகளின் மையமாக விளங்குபவைகளில் பாடசாலைகளின் வகிபங்குகள் காத்திரமானவையாக அமை கின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காரணம் யாதெனில் கலைச் செயற்பாடுகளில் ஈடுபடுபவர் களிடையே ஆளுமை ரீதியில் பல்வேறு மாற்றங்களினை அவதானிக்கக் கூடியதாக உள்ளது.

குறிப்பாக தலைமை தாங்கும் திறன், கூட்டிணைப்பு, பிரச்சினை தீர்த்தல் எனப் பல்வேறு அம்சங்களினை குறிப்பிட முடியும். இவ் வெளிப்பாட்டிற்கு அடிப்படைகளாக பாடசாலை வெளிகள் அமைகின்றன.

பாடசாலை வெளிகளில் நிகழ்த்தப்படுகின்ற விழாக்கள், போட்டிகளே இவற்றிற்கு அடிப்படையாக அமைகின்றன. இப் பகைப் புலத்தில் பல்வேறு கலைச் செயற்பாடுகள் இடம்பெறுகின்ற போதும் துரதிஷ்டவசமாக மாணவர்களது சுய செயற்பாட்டிற்கு வாய்ப்பளிக்காது அதிகாரத்துவமான செயற்பாடுகளும் இடம் பெறுவதுண்டு.

ஆயினும் இவற்றில் இருந்து மாறுபட்டதாகவும் மாணவீய படைப்பாளிகளின் உள்ளூற வெளிப்படுத்தலுக்கான களமாகவும் பார்ப்போரினால் பெரிதும் விஞ்சித்துப் பேசும் நிகழ்வுகளாக பாடசாலை கலைச் செயற்பாடுகள் விளங்குகின்றன.

அடிப்படையில் பலருக்கும் தமது ஆளுமைகளினை வெளிக்கொணர்வதில் தடையாக உள்ள விடயங்கள், பயமும், வெட்கமும் ஆகும். இவையிரண்டுமே வாழ்க்கையில் வெற்றி பெறுவதற்கான எதிரியுமாகும். ஆனால் இவ்வாறான நிகழ்வின் மூலம் இவ்விரண்டினையும் மாணவர்களிடையே நீக்குவதற்கான களமாக அமைந்தது.

இவ்வாறான நிகழ்வுகள் தகவமைக்கப்படும் போது மாணவர்களின் மனவியல் மாற்றத்திற்கும், ஆளுமை விருத்திக்கும் அடிப்படையாக அமையும் என்பது நிதர்சனம்

**எஸ்.ரி.அருள்குமரன்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மெஞ்ஞானமே விஞ்ஞானத்திற்கு வித்திட்டது

இன்றைய உலகத்தில் பல்வேறுபட்ட நாடுகளில் பல்வேறுபட்ட கண்டுபிடிப்புக்கள் பெருகிக்கொண்டு போகின்றன. ஆராய்ச்சிகளின் பெருக்கத்தாலும், கண்டுபிடிப்புக்களின் புதுமைகளாலும் கடவுளே இல்லை என்று சொல்லிக்கொண்டு செல்கின்றான் மனிதன். ஆனால் இவையெல்லாம் அவனின் முட்டாள்த்தனம் என்பது அவனுக்கு புரிவதில்லை. இன்றைய விஞ்ஞானம் கண்டுபிடிப்பதை பண்டைய காலத்தில் எமது சமயம் கண்டுபிடித்து கூறியவைதான் என்பதே உண்மை. அதைப் பற்றித் தான் நாம் விரிவாக ஆராயப்போகின்றோம்.

இன்றைய விஞ்ஞான காலகட்டத்தில் சூரியனில் ஏழு நிறங்கள் உள்ளன என மனிதன் கண்டுபிடித்து கூறினான். ஆனால் இதை எமது சமயம் புராண இதிகாச காலம், பல்லவர், சோழர் கால கட்டிடக்கலை வளர்ச்சி பெற்ற காலத்திலேயே இதை எடுத்துக் கூறிவிட்டது. அதாவது புராதனகால ஆகமமுறைப்படி அமைக்கப்பட்ட கோயில்களிலே நவக்கிரகங்கள் காணப்படும். அந்நவக்கிரகங்களின் நடுவிலே சூரியபகவான் அமையப் பெற்றிருப்பான் அச் சூரியன் ஏழு குதிரைகளின் மீது நிற்பதைப் போன்று காணப்படும். அவ் ஏழு குதிரைகளும் ஏழு வகையான வர்ணத்தால் அமையப்பெற்றிருக்கும். எனவே புராதன காலத்தில் சூரியன் ஏழு வகையான நிறத்தைக் கொண்டுள்ளான் என எமது சமயம் கூறியதை இன்று விஞ்ஞானம் கண்டுபிடித்துள்ளது எனலாம். இதேபோன்று இன்று உலோகங்கள் ஊடுகடத்தும் இயல்பைக் கொண்டது என விஞ்ஞானம் கூறுகின்றது. அதை எமது சமயம் பண்டைய காலத்திலேயே கூறிவிட்டது. இது பற்றி பார்க்கையில் எமது ஆகமமுறைப்படி அமைக்கப்பட்ட கோயில் களில் கருவறைக்கு மேலே உள்ள விமானத்தில் உலோகத் தாலான கலசம் வைக்கப்பட்டிருக்கும். இதை நாம் இன்றைய காலத்திலும் காணலாம். இதன் தத்துவம் என்னவெனில் ஆலய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருவறைக்குள்ளே ஓதப்படுகின்ற வேதமந்திரங்கள் வானிலே உள்ள தேவர்களுக்கும், இறைவனுக்கும் எடுத்து செல்லப்படு வதற்காக அமைக்கப்பட்டது. இதன் மூலம் உலோகமானது ஊடுகடத்தும் தன்மை கொண்டது என்பதை எமது சமயம் புராதன காலத்திலேயே கூறிவிட்டது. இவை புராதன மெஞ்ஞான கண்டு பிடிப்பே இன்றைய விஞ்ஞானத்திற்கு வழிகாட்டியது என்பதற்கு எடுத்துக்காட்டாகும்.

மேலும் தொடர்ந்து நோக்குகையில் இன்றைய கால கட்டத்தில் மனிதன் ஆகாய விமானத்தைக் கண்டுபிடித்துள்ளான். ஆனால் இதை எமது சமயத்தில் இதிகாச காலத்தில் காணக் கூடியதாக இருக்கின்றது. அதாவது இராமாயணத்திலே இராவணன் சீதையைக் கடத்திக்கொண்டு போகின்ற வேளையிலே புஸ்பக விமானத்தில் கடத்திக்கொண்டு போவதை இராமாயணம் கூறுகின்றது. எனவே இன்று கண்டுபிடிக்கப்பட்ட விமானத்தை எமது சமயம் புராதன காலத்திலேயே கண்டுபிடித்துவிட்டது. அதே போன்று ஆரம்பகாலங்களில் சித்தர்கள், யோகிகள், சாமியார்கள், முனிவர்கள் என அனைவரும் வனவாசத்தின் போது காவி உடையையே அணிவார்கள். இது ஏனெனின் காவி நிறத்திற்கு பூச்சிநச்சு ஜந்துக்கள் தீண்டாது. எனவே அவர்கள் பாதுகாப்பாக தமது தியானத்தையோ அல்லது வேலைகளையோ மேற்கொள்ள லாம் என்பதே ஆகும். எனவேதான் இன்று கிராமங்களில் காணப்படும் பாடசாலைகளின் சுவர்களின் அடிப்பகுதியில் காவி நிறம் அடிக்கப்படுகின்றது. அதன் மூலம் பாடசாலைக்குள் பூச்சி மற்றும் ஜந்துக்கள் நுளையமாட்டாது. இதைவிட மிக முக்கியமானது என்னவெனில் இன்றைய காலகட்டத்தில் பயன்படுத்தப்படும் மருந்துக்களுக்கு பெரும்பாலும் ஆரம்பகாலத்து எமது சமயத்தில் சொல்லப்பட்ட மூலிகைகளே பயன்படுத்தப்படுகின்றது குறிப்பாக சொல்லப்போனால் புற்றுநோய் போன்ற பல்வேறுபட்ட பாரிய நோய்களுக்கு பச்சை அறுகம்புல் சாற்றிலிருந்தே இன்று மருந்து கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதேபோன்று இன்றைய காலத்தில் மிகப்பெரிய வைத்தியர்களாலும், மருத்துவத்தாலும் குணப்படுத்த முடியாத வருத்தங்களையும், வியாதிகளையும் எவை குணப்படுத்துகின்றன என்று சற்று யோசியுங்கள்? அவற்றை யோகாசனங்கள் மூலம் குணப்படுத்தலாம். இவற்றை வைத்தியர்களே பரிந்துரைக்கிறார்கள். இதை இன்று பலரும் பின்பற்றுகின்றார்கள். இவையெல்லாம் மெஞ்ஞானக் கருத்துக்களே. விஞ்ஞானத்திற்கு வித்திட்டதற்கு எடுத்துக்காட்டாக அமைகின்றன. மேலும் இன்றைய காலத்தின் அரசியல் சட்டங்களுக்கு வித்திட்டவை எவை என்று சற்று சிந்தித்துப் பாருங்கள்? அதாவது ஆரம்பகால கட்டத்தில் இந்து தர்மம் பற்றி மனுதர்ம சாஸ்த்திரம் சிறப்பாக குறிப்பிடுகின்றது. அரசன் தொடக்கம் சாதாரண மனிதன் வரை ஒவ்வொருவருக்குமுரிய நீதியை சிறப்பாகக் குறிப்பிடுகின்றது. இவைதான் இன்றைய மனித உரிமைச்சட்டம், அரசியல்சட்டம் என அனைத்திற்கும் வித்திட்டது. உலக நாடுகள் அனைத்திலும் குறிப்பிட்ட சில நூற்றாண்டுக்கு முன்னரே இச்சட்டங்கள் அனைத்தும் தோற்றம் பெற்றன. ஆனால் இந்து சமயத்தில் பல நூறு நூற்றாண்டுக்கு முன்னரே இவையெல்லாம் தோற்றுவிக்கப் பட்டுவிட்டது. இதன் மூலம் இந்து சமயமே அனைத்திற்கும் ஆதாரமாக அமைந்தது. எனவே அவற்றின் மூலம் இந்து சமயத்தின் மெஞ்ஞானக் கருத்துக்களே இன்றைய விஞ்ஞானத்திற்கு வித்திட்டது எனலாம்.

**சி. ஸ்ரீசங்கரசர்மா**

**புவியியல் சிறப்புக்கற்கை**

**3ம் வருடம்,**

**கிழக்குப் பல்கலைக்கழகம்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Divine love

Great energetic pure devotional feeling is divine love. devotion and dedication towards goodness and kindness are the good qualities that adorn divinity. A man without religion is like a horse without saddle. "life is for living" "Stength is life" "life depends on liver". what meningful proverbs these are! Taking into consideration, spiritual concept is never utterly different. "God is love, peace and bliss" "God is truth and might" Above all, we can say "God is formless and with form". finally, we can say god has greatness. Humanity, Generosity, Reality, Sincerity, purity Morality, Duty and Beauty are the prayer Beads likse to be accounted in our practical ;ives so as to get Divine love..

The Eyes of Divine Love looks all the Same without any discrimination.The eyes of Divine love look into the hearts of the generous people, reasonable. thinking of ramayana Epic in its story, Ragula Rama,amonogamist, An Avatar of krishn bhavan once said to Ravana, ten headed king of ceylon, at the warfront, "Go and come back tomotow you, being unarmed"Humanity and generosity show the real divine love in this matter. It is actually a charitable duty and beauty of Royal Qualities. There was a light of Divine love, the readers could recognize rama A Gowsala Rama Kari Rama Kari.

"Wars have no lows" a very good quotation to be remembered accordingly "maha Bharatham Epic". In Its story, Lord Kirishna, Mathava the Great Kesva,the Lord of war straegies preferred showering his divine love towards the Devotees of sincerity and purity During the war time, He encourged veema, Aman of srength for panchapandava Group to defeat Thuriyothana, the king of Injustice - Gowravar Group, a very good rival and villain. At that time lord Kannan - Bhagavan lifted his Lotus foot and leg, showing Veema to



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

beat Thuriyothana, on his thigh where his life, could hide. Veema did as Bhagavan acted cunningly, but graciously to show the power of Divine Love and real sincerity. Divine Love wins anything and anyone, anytime and anywhere, when we ars with Divine thoughts Pronouncement of Names of Gods and Godesses.

Now a days, Modernity takes the humanity somewhere from Divinity? if we cultivate Divinity, Humanity may blossom while Animal quality vanishes. How can we cultivate Divinity? It is a questionable question among the youths of modernity in this wonderful adventureous globe. What and what paths and duties. we have to follow up to build up divine love or divine qualities? Only the prayers of names of lords. We should pronouce continuously and constantly in our daily lives. Continuous and constant chanting prayers between 3 am and 6 am is an ideal divine time to all the needy who wish to have Divine Love in this globe. Another one is great service to the needy, we should do accordingly our power and wealth, as the timely help - in a charitable way. The prayers of sincerity and Divinity can give us divine strength to develop the divine love in our minds. We can obtain the divine love feelings of light when we keep the divine minds of luminous wicks in the divine Feelings of prayers of oil. It's the illustrious divine love - lamp we can carry with our words, thoughts and deeds. Divine love is the key to unlock the doors of innocence and it is a meaningful instrument to ignorance get us free from worldly desires.

"Divinity is the fragrant white rose flower of the devotion and dedication"


**By : R.Sanmukasundaram (Shan)**
***Teacher of English (S.L.T.S)***
***(An Ardent devotee of Alwar)***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிழல் பதிவுகள்















வெளியீடு :
பெரியாழ்வார் ஆச்சிரமம்

சிவரஞ்சனம் ஓவ்செற் பிறின்டேர்ஸ், பலாலி வீதி, கோண்டாவில். T.P :- 077 3068982

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org